# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,846—1962 ජනවාරි 5 වැනි සිකුරාදා—5.1.1962

12,846 ம் இலக்கம்—1962 ம் ஆண்டு சனவரி மாதம் 5 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனங்கள் .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும்.. | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 2 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | 1 | " மதுவரிச் சட்ட " அறிவித்தல்கள் .. ... | — |


## அரசாங்க அறிவித்தல்கள்

### சம்பளச் சபைச் சட்டம் (அத்தியாயம் 136)

அறிவித்தல்

கட்டத்தொழிற் சம்பளச்சபையில் முதலாளிகளின் பிரதிநிதியாக இருந்த திரு. எஃப். ஜே. ஸ்பார்க்ஸ் தாமாக விலகியதால், அவருக்குப்பதிலாக அங்கம் வகிக்க திரு. நீ. ஹட்டன் என்பவரை, (136 ம் அத்தியாயமாகிய) சம்பளச்சபைச்சட்டத்தின் 9 ம் பிரிவின் பிரகாரம், கனம் தொழில் தேசியமய சேவைகள் மந்திரி மகிழ்ச்சியுடன் நியமித்துள்ளாரென, 1943 ம் ஆண்டின் சம்பளச்சபை விதிகளின் 26 ம் விதியின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

வி. சா. ம. த் மெஸ்,
தொழில், தேசியமய சேவைகள் மந்திரி காரியாலய
நிரந்தரக் காரியதரிசி.

கொழும்பு,
1961 ம் ௵ டிசெம்பர் ௴ 22 ந உ.

1–2

### சம்பளச் சபைச் சட்டம் (அத்தியாயம் 136)

அறிவித்தல்

தென்னை வளர்ப்புத் தொழிற் சம்பளச்சபையில் முதலாளிகளின் பிரதிநிதியாக இருந்த திரு. ஈ. முத்துக்குமாரு தாமாக விலகியதால், அவருக்குப் பதிலாக அங்கம் வகிக்க திரு. ஏ. எச். கே. ஓமர் என்பவரை, (136 ம் அத்தியாயமாகிய) சம்பளச்சபைச் சட்டத்தின் 9 ம் பிரிவின் பிரகாரம், கனம் தொழில் தேசியமய சேவைகள் மந்திரி மகிழ்ச்சியுடன் நியமித்துள்ளாரென, 1943 ம் ஆண்டின் சம்பளச்சபை விதிகளின் 26 ம் விதியின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

வி. சா. ம. த மெஸ்,
தொழில், தேசியமய சேவைகள் மந்திரி காரியாலய
நிரந்தரக் காரியதரிசி.

கொழும்பு,
1961 ம் ௵ டிசெம்பர் ௴ 22 ந உ.

1–3

### தொழினுட்பக் கல்வி பற்றிய விசாரணை ஆணைக்குழு, 1961

மேல் அறிவித்தல்

1961 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 20 ந் திகதிய, டிசெம்பர் மாதம் 2 ந் திகதிய தினப்பத்திரிகைகளிலும் 1961 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ந் திகதிய அரசாங்க செய்திமடலிலும் வெளியிடப்பட்ட எனது 18.11.1961 ந் திகதிய அறிவித்தல் சம்பந்தமாக மேலும் தெரிவிப்பதாவது : எழுத்து விஞ்ஞாபனங்கள், பொதுக் கேள்விக் கொத்துக்கு " ஈ " படிவத்தில் பதில்கள், அ, ஆ, இ படிவங்களில் தகவல்கள் முதலியனவற்றை அனுப்பி வைப்பதற்குரிய திகதி **1962 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ந் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.**

2. " ஈ " படிவத்தில் அச்சிட்ட பொதுக் கேள்விக் கொத்தைவிட அல்லது அதற்கு மேலாக ஆணைக்குழுவின் விசாரணை அலுவல் நியதி கட்குட்பட்ட விடயங்கள் சம்பந்தமாக எழுத்து விஞ்ஞாபனங்களை அனுப்பி வைக்கலாமெனப் பொதுமக்களுக்கும் சங்கங்களுக்கும் அறிவிக்கப்படுகின்றது.

3. அரசாங்க உத்தியோகத்தர்கள், அவர்கள் விரும்பினால், ஆணைக் குழுவின் விசாரணை அலுவல் நியதி விடயங்கள் பற்றிய எழுத்து விஞ்ஞாபனங்களைத் தமது திணைக்களத் தலைவர்கட்கூடாக அனுப்புவதற் குப் பதிலாக நேரடியாக ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பி வைக்கலாம்.

4. " ஆ " படிவம் ஆள் – வலு கணிப்புக்குரியது என்பதை விசேடமாகக் கவனித்துக் கொள்ளவேண்டும். ஆதலால் தேர்ச்சியுள்ள அல்லது ஓரளவு தேர்ச்சியுள்ள வேலையாட்களை வேலைக்கமர்த்தியுள்ள ஒவ்வொருவரும், அவ்வேலையாட்கள் எந்த வகையான வேலையைச் செய்பவர்களாகவிருந்தாலென்ன, எந்தப் பிரிவைச் சார்ந்தவர்களாயிருந்தாலென்ன, அவர்கள் கீழ்த்தர, மத்தியதர அல்லது உயர் தரப் பணியாளர்களாய் இருந்தாலென்ன, இப்படிவத்தை நிரப்ப வேண்டும். அரசாங்க நிர்வாகத்தின் கீழும் தனிப்பட்டோர் நிர்வாகத்தின்


வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப் படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

கீழும் உள்ள ஏற்கனவே இத்தகவல்களை அனுப்பாத ஸ்தாபனங்கள், தொழில் நிலையங்கள், நிலையங்கள், திணைக்களங்கள் அவற்றைத் தாமதமின்றி இப்போது அனுப்பி வைக்கும்படி வேண்டப்படுகின்றன.

5. சிறிய கைத்தொழில்களை ஸ்தாபிப்பவர்கள் அல்லது அவ்விதம் செய்ய உத்தேசித்திருப்பவர்களும் இவ்விதம் தமக்குத் தேவைப்படும் தேர்ச்சியுள்ள ஆள்—வலுபற்றிய விபரங்களை அனுப்புதல் ஆணைக்குழுவிற்கு உதவியாகவிருக்கும்.

6. அனேக ஸ்தாபனங்கட்குப் படிவங்கள் அஞ்சல் செய்யப்பட்டுள்ளன. படிவங்களைப் பெற்றுக்கொள்ளாத ஸ்தாபனங்கள் அவற்றை இவ்வலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளல் வேண்டும். சகல தொடர்புகளையும் தொழினுட்ப ஆணைக்குழுவின் செயலாளருக்கு விலாசமிடுவதன்றி வேறெவரது பெயருக்கும் அனுப்பக்கூடாது.

ஆர். விஜெசிங்ஹ,
செயலாளர்,
தொழினுட்பக் கல்வி விசாரணை
ஆணைக்குழு.

தொழினுட்பக் கல்வி ஆணைக்குழு அலுவலகம்,
மலாய் வீதி, கொழும்பு 2,
1961 ம் ஆண்டு டிசெம்பர் மீ 20 ந் வ.

1-1

---

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவின் 7 ம் உட்பிரிவின் பிரகாரம் கீழ்க்காணும் அட்டவணையிலுள்ள கட்டளைகள் என்னால் அங்கீகரிக்கப்பட்டவைகளென இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

கொழும்பு 2,
1961 ம் ஆண்டு டிசம்பர் மீ 28 ந் வ.

ரீ. பீ. இலங்கரத்ன,
வர்த்தக, வியாபார, உணவு, கப்பற்சேவை அமைச்சர்.

அட்டவணை

| கட்டளையிட்ட திகதி | கட்டளையிடுவதற்கு யாரால் அதிகாரம் வழங்கப்பட்டது | கட்டளை எப்பொருளுக்கு சேர்மதியானது | கட்டளை எவ்வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது |
|---|---|---|---|
| 4.12.61 .. | விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு) .. | சீனி (பளுப்பும் வெள்ளையும்) .. | 4.12.61 ம் திகதியைக்கொண்ட 12,794 ம் இலக்கம் |
| 15.12.61 .. | ,, .. .. | உப உணவுப் பொருட்கள் .. | 15.12.61 ம் திகதியைக்கொண்ட 12,825 ம் இலக்கம் |

1-39

---

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

### 1960 ம் ஆண்டிற்குரிய இலங்கை உயிர்ப்புள்ளி விபரங்கள் பற்றிய பூர்வாங்க அறிக்கை

1960 ம் ஆண்டிற்குரிய உயிர்ப்புள்ளி விபரங்களின் முக்கிய அம்சங்களின் சுருக்கம் பின்வருமாறு :—

#### சனத்தொகை

இலங்கையின் கணிக்கப்பட்ட சனத்தொகை வருடமத்தியில் 9,896,000 ஆகவும் வருட முடிவில் 10,030,000 ஆகவும் இருந்தது. 1959 ம் வருடத்தின் 2·7 சத வீத அதிகரிப்புடன் ஒப்பிட்டுப்பார்க்கும்பொழுது இவ்வருடத்தில் குடிசன அதிகரிப்பு 2·8 சத விகிதமாயிருந்தது. இறப்பிலும் பார்க்கப் பிறப்பு (இயற்கை அதிகரிப்பு) 276,784 அதிகமாகவும், குடிவருவோரின் தொகையிலும் பார்க்க குடியகல்வோரின் தொகை 6,022 அதிகமாகவும் இருந்தது.

மேலே தரப்பட்ட சனத்தொகை மதிப்பு 1953 ம் ஆண்டு குடிசன மதிப்பீட்டில் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் கணக்கில் ஏற்பட்டிருக்கக் கூடிய குறை மதிப்பீட்டிற்காகிய திருத்தத்தைக் கொண்டதாகும். இங்கு பிரசுரிக்கப்படும் விகிதங்களும் அப்படிக்கணிக்கப்பட்ட சனத்தொகையை அடிப்படையாகக் கொண்டவைகளே.

#### விவாகங்கள்

பொதுவிவாகப் பதிவுச் சட்டத்தின் கீழும், கண்டிய விவாகப்பதிவுச் சட்டத்தின் கீழும், 47,674, பொதுவிவாகங்களும், 8,478 கண்டிய விவாகங்களுமாக 56,152 விவாகங்கள் பதியப்பட்டன. 1959 ம் ஆண்டிற் பதியப்பட்ட விவாகங்களின் எண்ணிக்கை 55,633 முஸ்லீம்களல்லாத தொகையில் ஒவ்வொரு ஆயிரத்திற்கும் விவாக விகிதம் 1959 ல் 6·2 ஆகவும் 1960 ல் 6·1 ஆகவும் இருந்தது. இவ்வாண்டில் பதியப்பட்ட முஸ்லீம் விவாகங்களின் தொகை 5,616 ஆகவும் 1959 ம் ஆண்டில் 5,667 ஆகவும் இருந்தது. இரண்டு வருடங்களுக்கும் உள்ள முஸ்லீம் சனத்தொகையின் ஆயிரத்திற்கான விகிதங்கள் முறையே 8·5 ம் 8·8 ம் ஆகும்.

#### பிறப்புகள்

1960 ல் பதியப்பட்ட பிறப்புகளின் தொகை (183,799 ஆண்களினதும் 177,903 பெண்களினதுமாக) 361,702 ஆகும். முன்னைய வருடத்தின் தொகையாகிய 356,336 இலும் பார்க்க இவ்வருடம் 5,366 அதிகமாயிருக்கிறது. பிறப்பிற்குரிய ஆண்பெண் விகிதம் ஒவ்வொரு ஆயிரம் பெண்களுக்கும் ஆயிரத்து முப்பத்தி மூன்று ஆண்களாக இருந்தது. சனத்தொகையின் ஒவ்வொரு ஆயிரம் பேருக்குரிய விகிதம் 36·6 ஆகவும் 1959 ல் 37·0 ஆகவும் இருந்தது. இவ்வருடத்தில் கொழும்பு நகரத்தில் 33,652 பிறப்புகள் பதியப்பட்டன. 1959 ம் ஆண்டிற்குரிய 32·3 விகிதத்துடன் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து, வதியும் சனத்தொகையின் பிறப்புவிகிதம் 31·2 ஆக இருந்தது. 1960 ல் தோட்டப்பகுதிகளிற் பதியப்பட்ட பிறப்புகளின் எண்ணிக்கை 35,718. 1959 ம் ஆண்டிற்குரிய தொகை 34,259.

#### இறப்புகள்

1959 ம் ஆண்டில் 87,971 இறப்புகளும் 1960 ம் ஆண்டில் 84,918 இறப்புகளும் பதியப்பட்டன. இவற்றில் 44,654 ஆண்களினதும் 40,264 பெண்களினதும் ஆகும். இதுகால வரை பதியப்பட்டவற்றிலும் பார்க்க ஆகக்குறைந்த மரண விகிதம் (8·6) இவ்வாண்டிற்குரியது. முன்னைய வருடத்தின் விகிதம் 9·1 கொழும்பு நகரத்தில் பதியப்பட்ட இறப்புகள் 1959 ல் 8,227 ம் இவ்வாண்டில் 7867 ம் ஆகும். முன்னைய ஆண்டின் நகரில் வதிவோருக்குரிய விகிதம் 8·9 ஆகவும் இவ்வாண்டு 8·1 ஆகவும் இருந்தது. தோட்டப்பகுதிகளில் 1959 ல் 10,911 இறப்புகளும் 1960 ல் 10,885 இறப்புகளும் பதியப்பட்டன.

#### சிசு மரணங்கள்

இவ்வாண்டு பதியப்பட்ட மரணங்களில் 20,540 சிசு மரணங்களாகும். 1959 ம் ஆண்டு பதியப்பட்ட மரணங்கள் 20,500. ஒவ்வொரு ஆயிரம் பிறப்புகளுக்கும் சிசுமரண விகிதம் 57 ஆகும். இதுவரை இலங்கையிற் பதியப்பட்ட சிசு மரண விகிதத்திலும் பார்க்க ஆகக்குறைவானது, 1960 ம் ஆண்டிற்குரிய விகிதமே. கொழும்பு நகரில் வதிவோருக்குரிய விகிதம் 61 ஆகும். முன்னைய வருடவிகிதம், 63 ஆக விருந்தது. தோட்டப் பகுதிகளுக்குரிய சிசுமரண விகிதம் 1960 ல் 100 ஆகவும் 1959 ல் 99 ஆகவும் இருந்தது.

#### கர்ப்பிணிகளின் மரணங்கள்

1960 ம் ஆண்டில் கர்ப்பம், பிரசவம் ஆகிய காரணங்களால் 1,094 மரணங்கள் சம்பவித்தன. 1959 ம் ஆண்டிற்குரிய பிரசவ மரணங்கள் 1,207 ஆகும். பிரசவ மரண விகிதம் 3·0. கொழும்பு நகரில் வதியும் சனத்தொகைக்காய விகிதம் 1·5. தோட்டப்பகுதிகளில் 1,000 பிறப்புகளுக்கு 2·5 விகிதம் கர்ப்பிணி மரணங்கள் சம்பவித்தன.

ஏ. எம். எஸ். பெரேரா,
பதிவு காரியகர்த்தர்.

பதிவு காரியகர்த்தர் காரியாலயம்,
கொழும்பு, 1
1961 ம் ஆண்டு டிசெம்பர் மீ 23 ந் வ.

1-29

## 1961 ம் ஆண்டின் 33 ம் இலக்க உற்பத்திப் பொருள் (உத்தரவாத விலையும், நெல் குற்றுதல் கட்டுப்பாடு செய்யும்) சட்டம்

### 3 ம் பிரிவின் கீழ் இடப்பட்ட கட்டளை

1961 ம் ஆண்டின் 33 ம் இலக்க கம உற்பத்திப் பொருள் (உத்தரவாத விலையும், நெல் குற்றுதல கட்டுப்பாடு செய்தலும்) சட்டத்தின் 3 ம் பிரிவின் கீழ் கொடுக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, உத்தரவாத விலை ஆலோசனைக் குழுவின் ஆலோசனையுடனும், நிதி அமைச்சருடன் கலந்தாலோசித்த பின், கமம், காணி, நீர்ப்பாய்ச்சல், மின்சார மந்திரியின் அதிகாரத்தோடும், 2 ம் நிறையில் கொடுக்கப்பட்ட உத்தரவாத விலைகளை முதலாம் நிறையில் கொடுக்கப்பட்ட உற்பத்திப் பொருட்களுக்கு, கமத் தொழிற் சேவை அதிகாரி ஜோசேப் வாணிங்டன் பொன்சேகா ஆகியநான் இந்தக் கட்டளை மூலம் உத்தரவாதஞ் செய்கிறேன்.

ஜே. வீ. பொன்சேகா,
கமத் தொழில் சேவை அதிகாரி.

கொழும்பு,
ஜனவரி 1, 1962.

### அட்டவணை

| நிறை 1 | | நிறை 2 |
|---|---|---|
| | | உத்தரவாத விலைப் புசல் ஒன்றுக்கு ரூ. சத. |
| 1. நெல் .. | .. .. | 12 00 |
| | | உத்தரவாத விலை அந்தர் ஒன்றுக்கு |
| 2. சோளம் | (1 ந் தரம்) .. | 16 50 |
| | (2 ந் தரம்) .. | 12 50 |
| 3. குரக்கன் | (1 ந் தரம்) .. .. | 15 00 |
| | (2 ந் தரம்) .. .. | 13 00 |
| 4. கம்பு | (1 ந் தரம்) .. .. | 15 50 |
| | (2 ந் தரம்) .. .. | 14 50 |
| 5. துவரம் பருப்பு (முழுது) .. | .. | 25 76 |
| 6. பருத்தி | (1 ந் தரம்) .. .. | 57 00 |
| | (இடைத்தரம்) .. | 50 00 |
| | (2 ந் தரம்) .. .. | 45 00 |
| | (3 ந் தரம்) .. .. | 36 00 |
| 7. கடுகு .. | .. .. | 54 00 |
| 8. எள்ளு .. | .. .. | 35 00 |
| 9. மிளகாய் | (1 ந் தரம்) .. .. | 134 40 |
| | (2 ந் தரம்) .. .. | 119 84 |
| | (3 ந் தரம்) .. .. | 105 38 |
| 10. பாசிப்பயறு | (1 ந் தரம்) .. .. | 40 32 |
| | (2 ந் தரம்) .. .. | 35 84 |
| 11. புளி .. | .. .. | 31 36 |
| 12. கறுத்த மிளகு | .. .. | 140 00 |
| 13. தட்டைப் பயறு | .. .. | 24 00 |
| 14. நிலக் கடலை | (1 ந் தரம்) .. | 49 28 |
| | (2 ந் தரம்) .. .. | 43 68 |
| 15. மஞ்சள் .. | .. .. | 84 00 |
| 16. கோப்பி | (1 ந் தரம்) .. | 224 00 |
| | (2 ந் தரம்) .. | 154 00 |
| 17. உருளைக் கிழங்கு | .. .. | 22 40 |
| 18. சின்ன வெங்காயம் (1 ந் தரம்) | .. | 28 00 |
| சின்ன வெங்காயம் (2 ந் தரம்) (அறுவடை செய்த முதல் மாதத்திற்கு) | .. | 21 28 |
| சின்ன வெங்காயம் (2 ந் தரம்) (அறுவடை செய்த முதல் மாதத்திற்குள்) | | |
| சின்ன வெங்காயம் (2 ந் தரம்) (பின் ஆறு கிழமைகட்குள்) | .. .. | 23 52 |
| சின்ன வெங்காயம் (அறுவடை செய்த பத்து கிழமைகட்குப் பின்) | .. .. | 25 76 |

1–160.

## விளம்பரம்

1962 ம் ஆண்டு தை (ஜனவரி) மாதம் 19 ந் திகதி வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறையாக இருப்பதால், 1962 ம் ஆண்டு தை (ஜனவரி) மாதம் 18 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1962 ம் ஆண்டு தை (ஜனவரி) மாதம் 13 ந் திகதி சனிக்கிழமை பி. ப. 12.30 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேர வேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

பேர்னட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு.
1962 ம் ௵ தை (ஜனவரி) மீ 5 ந் உ.

அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய கிரய விகிதங்கள்

## "இலங்கை அரசாங்க வர்த்தமானி (கசெற்)"

வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. கிழமை நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும், சனிக்கிழமைகளில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. கிழமை நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும், சனிக்கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல்வேண்டும்.

6. "நகலை" கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல், விசேஷமாக "ரைப்" அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப் பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் "சுப்பிறீம் கோட் புறெக்ருல்" கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லதுஅதற்குக் குறைய ... ... ... | 10 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி ... ... | 5 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் ... ... ... | 60 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் ... ... ... | 120 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமைதோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. வெளியாவதற்கு மூன்று வேலை நாட்களுக்கு முன் பி. ப. 4 மணிக்குள் (சாதாரணமாக செவ்வாய்க் கிழமை பி. ப. 4 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் :

அரசாங்க வர்த்தமானி (வருடத்திற்கு)

| | உள்ளூர் | | வெளியூர் | |
|---|---|---|---|---|
| | ரூ. | ச. | ரூ. | ச. |
| ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 22 | 50 | 35 | 50 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு ... ... ... | 12 | 50 | 18 | 0 |
| முதற் பகுதியின் இருபிரிவுகள் ... ... ... | 20 | 0 | 28 | 0 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | விலை | தபாற் செலவு (உள்ளூர்) |
|---|---|---|
| | சதம் | சதம் |
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 25 | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குப் பின் ஒவ்வொரு பகுதியும் ... ... | 50 | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் ... ... | 10 | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் ... | 20 | 15 |

இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத் தொகையை, அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி 500, கொழும்பு, என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.

இலங்கை, ஆனைஇறவு பாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.